புலமைவளரி

இலக்கை நோக்கி


5


நேரம்:- 1.00மணி வளரி – 024 புள்ளி:-

பெயர்:- ..... வினாத்தாள் - I ஆசிரியர்:- ஐ.சிவசங்கரலிங்கம்.


➢ முதலில் தரப்பட்டுள்ள உருவுடன் மிக நெருங்கிய உருவைத் தெரிவு செய்க.

01)





1.





2.




3.

02)






1.




2.



3.

➢ தரப்பட்டுள்ள உருக்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய விடையின் கீழ்க் கீறிடுக.

03)




1.அரித்தல்
2.புடைத்தல்
3.கடைதல்

1.



1.சிக்குதல்
2.பிண்ணுதல
3.சீவுதல்


2.



1.மழை
2.குளிர்
3.வெயில

3.

04)



1.பாடம்
2.படம்
3.அறிவு

1.



1.குளிர்ச்சி
2.வெப்பம்
3.காற்று

2.



1.பானம்
2.உணவு
3.குடித்தல்

3.


➢ நிகழ்வை ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான முறையைக் கொண்ட விடையை கீறிடுக.

05)



1) ACBDE 2) ADBCE 3) ADCBE

06)



1) ACBDE 2) ADBCE 3) ADCBE

➢ **முதலில் உள்ள சொல்லுடன் தொடர்புடைய சொல்லைத் தெரிவு செய்க.**


07) சந்தர்ப்பம் - 1. காலம் 2. தருணம் 3. நேரம்

08) தபால் - 1. போக்குவரத்து 2. மின்சாரம் 3. தொடர்பு


09) நோய்க்கு மருந்து போன்று பசிக்கு .....
1. சோறு 2. உணவு 3. தேநீர்

10) செவ்வந்தி மலர் எனின் முள்ளங்கி .....
1. கிழங்கு 2. தாவரம் 3. இலை

11) அருகிலுள்ள உருவில் காணப்படும் முக்கோணிக வட்டங்களினதும் எண்ணிக்கைகள் முறையே
1. 2 , 6 , 6
2. 2 , 5 , 6
3. 5 , 5 , 5



➢ **விளையாட்டுப் பொருட்கள் சிலவற்றின் விலை தொடர்பான தரவுகள் தரப்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 12, 13 , 14 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**



12) பட்டம் ஒன்றின் விலை யாது?
1. ரூ 30.00 2. ரூ 40.00 3. ரூ 50.00

13) விமானம் ஒன்றின் விலை யாது?
1. ரூ 40.00 2. ரூ 50.00 3. ரூ 60.00

14) கார் ஒன்றின் விலை யாது?
1. ரூ 30.00 2. ரூ 40.00 3. ரூ 50.00

➢ **தரவை அவதானித்து விடை தருக.**

15 □ 6 = 9 → 3 Δ 2 = 6 எனின் 4 Δ 3 □ 5 = ?

15) வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் எது?

1. 7 2. 2 3. 4


16) ○ + □ = 23 → ○ + ○ + ○ + □ + □ = 53

□ இவ்வுருவின் பெறுமானம் யாது?

1. 12 2. 16 3. 17

17) ஒரு வகுப்பிலுள்ள பிள்ளைகளின் கால்களின் எண்ணிக்கையும் கதிரைகளின் எண்ணிக்கையையும் சேர்த்த போது கால்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆகும். அங்கிருந்த பிள்ளைகள் எத்தனை பேர்?


1. 10 பேர் 2. 15 பேர் 3. 18 பேர்


18) 


கம்பி ஒன்றை வளைத்து இச் செவ்வக வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இதே கம்பியை வளைத்து சதுரம் ஒன்றை அமைத்தால் அச்சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?


1. 40 cm 2. 30 cm 3. 35 cm

19) அருகிலுள்ள சதுரமுகி அட்டைத்துண்டு ஒன்றினால் ஆனது. இங்கு ஒன்றுக்கு ஒன்று எதிரான முகங்களிலுள்ள எழுத்துக்கள் சமனானவை. அதன்படி அவ் அட்டைத்துண்டை விரித்தால் காணக்கிடைக்கும் ஒழுங்கைத் தெரிவு செய்க.



1. 

2. 

3. 

➢ **அட்டவணையிலுள்ள தகவலுக்கேற்ப விடை தருக.**

நாள்	தை 31	மாசி 28	பங்குனி 31	சித்திரை 30	வைகாசி 31
எண்ணிக்கை	31	59	90	.....	151

20) சித்திரை 30 ஆம் திகதிக்கு பொருத்தமான எண் யாது?

1. 131 2. 123 3. 120

21) எண் 100 இற்குப் பொருத்தமான எண் யாது?

1. ஏப்ரல் 08 2. ஏப்ரல் 10 3. ஏப்ரல்14


➢ **மிகச் சரியான வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.**

22) 1. ஓர் உத்தம குணமாகும் ஏழை எளியவர்களுக்கு உதவுவது
2. ஏழை எளியவர்களுக்கு உதவுவது ஓர் உத்தம குணமாகும்
3. உத்தம குணமாகும் ஒரு ஏழை எளியவர்களுக்கு உதவுவது

23) இடது புறமாக வீதியால் நடந்து கொண்டிருந்த சிறுவன் ஒருவன் வலது புறமாக சென்று கொண்டிருந்த பேரூந்து அடித்து விட்டது என்று அண்ணா கூறினார். இக்கூற்று
1. வீதி விதிகளை சரியாகக் கடைப்பிடித்த சிறுவனுக்கு நேர்ந்த அநீதியாகும்.
2. வீதி விதிகளை சரியாகக் கடைப்பிடித்த பேரூந்து சாரதிக்கு ஏற்பட்ட சம்பவமாகும்.
3. வீதிவிதிகளை சரியாகக் கடைப்பிடிக்காமையை சுட்டிக்காட்டுகிறது.


24) உவமானத்ததிற்கு பொருத்தமான சந்தர்ப்பத்தை தெரிவு செய்க
ஆற்றிலே கரைத்த புளி
1. எதிர் பார்த்து ஏமாறுதல்
2. வெளி உலகம் தெரியாத நிலை
3. பயனற்ற செயல்

25) நெல் - குவியல் எனில் பல் - .....
1. அடுக்கு
2. குவியல்
3. வுரிசை


26) 

அருகில் காணப்படும் சதுரமுகியின் முகங்களில் உள்ள எண்கள் 2இல் ஆரம்பித்து அதன் மூன்று மடங்கால் அதிகரித்துச் செல்கின்றது. ஏனின் அதில் காணப்படும் மிகக் கூடிய பெறுமதி உள்ள எண் யாது?
1. 32 2. 486 3. 729

27) அருகிலுள்ள உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது
1. உருக்கள் எல்லாம் மாறாது இருக்கும்
2. உருக்கள் எல்லாம் மாறியும் மாறாமலும் இருக்கும்
3. உருக்கள் எல்லாம் இடம்மாறி இருக்கும்



28) ஒரே அளவான செவ்வக அட்டையை ஒன்றோடு ஒன்று ஒட்டி இவ்வுரு அமைக்கப்பட்டுள்ளது. செவ்வக அட்டை ஒன்றின் நீளம் 6 cm எனின் செவ்வக அட்டை ஒன்றின் அகலம் யாது?
1. 2cm 2. 1cm 3. 3cm



29) ஒரு மோட்டார சைக்கிளோட்டி 10வதுkm கல்லிலிருந்து 20வதுkm கல்லை கடப்பதற்கு 5நிமிடம் எடுத்தது மோட்டார் சைக்கிள் அதே கதியில் சென்றால் 60வது கல்லை கடப்பதற்கு எவ்வளவு நிமிடம் எடுக்கும்?
1. 10 நிமிடம் 2. 20 நிமிடம் 3. 25 நிமிடம்

30) வகுப்பு ஒன்றில் 38 மாணவர்கள உள்ளனர். அவர்களில் 6பேர் திங்கட் கிழமை வருகை தரவில்லை. திங்கட் கிழமை வருகை தராதவர்களில் அரைவாசி மாணவர்கள் செவ்வாய் கிழமை வருகை தரவில்லை எனின் செவ்வாய் கிழமை பாடசாலைக்கு வந்த மாணவர்கள் எத்தனை பேர்?

1. 35பேர் 2. 32பேர் 3. 37பேர்

31) நிருத்திகாவின் தாயின் நிறை நிருத்திகாவின் நிறையின் 3மடங்காகும். தாயின் நிறை 75kg 750g எனின் நிருத்திகாவின் நிறை யாது?

1. 25kg 250g 2. 27kg 350g 3. 28kg 350g

32) ஒரு குவியலில் 9 வீதம் 5 குவியல் மாம்பழங்களையும் ஒரு குவியலில் 7 வீதம் 9 குவியல்களில் உள்ள மாம்பழங்கள் அனைத்தையும் திரட்டி ஒவ்வொரு குவியலிலும் 6 மாம்பழங்கள் வீதம் இருக்கும் வகையில் எத்தனை குவியல்களை உருவாக்க முடியும்?

1. 14 2. 12 3. 18

➢ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

33) பனிக்கட்டி – திண்மம் என்பது போல இரசம் - திரவம் என்பது

1. சரியானது 2. பிழையானது 3. கூறமுடியாது

34) எனது வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் பாடக்கூடியவர்கள். சிமியோன் பாடக்கூடியவன் எனின் சிமியோன் எனது வகுப்பைச் சேர்ந்தவன் என்னும் கூற்று

1. சரியானது 2. பிழையானது 3. கூறமுடியாது

35)

08: 20: 12
08: 18: 20

நிருபன் குறுந்தூர ஓட்டப்போட்டியில் ஓட ஆரம்பித்த நேரமும் முடித்த நேரமும் நிறுத்தற் கடிகாரம் ஒன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நிருபன் குறுந்தூர போட்டியை ஓடி முடிக்க எடுத்த நேரம் யாது?

1. 2 நிமிடம் 10 செக்கன் 2. 1 நிமிடம் 08 செக்கன் 3. 1 நிமிடம் 52 செக்கன்

➢ **கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துக்களின் ஒழுங்கில் இலக்கங்கள் எழுதப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவும்.**

TEA – 356 BATA - 5645 TOP - 796

36) B க்குப் பதிலாக வழங்கப்பட்ட இலக்கம் எது?

1. 7 2. 4 3. 6

37) TABE என்னும் சொல்லுக்குப் பயன்படுத்தப்பட்ட இலக்கங்கள் எவை?

1. 5436 2. 4356 3. 6543

➢ **ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே சொற்கள் தரப்பட்டுள்ளன. சொற்களை சரியான முறையில் ஒழுங்குபடுத்திய விடையின் கீழ்க் கோடிடுக.**


38) M- நோய்கள் N- இருந்து O- சுத்தமாக P- வாழ்வோம் Q- அற்று

1. MQNPO 2. ONMQP 3. OMNQP

39) A -அழிப்பதனால் B -இழக்கின்றன C - காடுகளை D -விலங்குகள் E - இருப்பிடத்தை

1. DEBAC 2. CDAEB 3. CADEB

40)



தரப்பட்ட உருவில் நாடு, மாகாணம், மாவட்டம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு காட்டப்பட்டுள்ளது. இதில் c யினால் காட்டப்பட்டது.

1. நாடு 2. மாகாணம் 3. மாவட்டம்

(40X2.5=100)







புலமைவளரி 5

இலக்கை நோக்கி

நேரம்:- 1.15மணி வளரி – 024 புள்ளி:-

பெயர்:- ..... வினாத்தாள் - II ஆசிரியர்:-ஐ.சிவசங்கரலிங்கம்.

01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

மழைக்காலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்களெல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்தது போல் காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லாம் நீர் நிறைந்திருக்கும். நதிகளிலோ குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்கப் பதுங்கிப் பதுங்கிச் செல்லும் நிலையை நாம் காணமுடியாது. நன்றாக் விளைந்த கிழங்குகள், வேர்கள், இலைகள் என்பவற்றைச் சுவைத்து உண்டு பருத்த பன்றிகளோடு, மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக் கூட்டம் நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டுக்குள்ளேயே ஆடி அசைந்து செல்வதையும் காணலாம்.

1. இப்பந்தியிலுள்ள இணைமொழிகள் இரண்டினை எழுதுக.
   .....
2. சினைப் பெயர்கள் இரண்டினைத் தருக. .....
3. பெயர் அடைமொழிச் சொல் ஒன்றினைத் தருக. .....
4. அடுக்குமொழியைத் தெரிந்து எழுதுக. .....
5. உவமைத் தொடரினைத் தருக. .....
6. "வளர்ந்திருக்கும்" என்பதைப் பிரித்து எழுதுக. .....

(6x1=6)

02) பின்வரும் எழுத்துக் கூட்டங்களில் மெல்லின எழுத்துக்களைத் தெரிவு செய்க.

1. க் ட் ய் ல் ண்
2. ப் ந் வ் ழ் ற்

(2x1=2)

03) 1. பின்வருவனவற்றில் வினை எச்சச் சொல் எது?
ஓடி, துரத்திய, பாடிய, விழுந்த

2. பின்வருவனவற்றில் பெயர் எச்சச் சொல் எது?
ஏந்தி, வந்த, ஆடி, வெடித்து

(2x1=2)

04) பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க்குறிகளை எழுதுக.

1. நூல் .....
2. சுத்தம் .....

(2x1=2)

05) தனி வாக்கியத்தை தொடர் வாக்கியமாக எழுதுக.

1. விவசாயி வயலை உழுதான்.
2. விவசாயி நாற்று நட்டான்.

.....

(2x1=2)

06) **அதிகாலையில் எழுந்து படி என்று அம்மா கூறினார்** இந்த வாக்கியத்தில் இடப்பட வேண்டிய நிறுத்தற் குறிகள் எவை?

.....

(2x1=2)

07) பின்வரும் சொற்களின் எதிர்க் கருத்தினைத் தருக.

1. ஆதரவு ……. 2. இம்மை ……..

(2x1=2)

08) விடை தருக.

1. நூறு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி …….
2. ஒருவர் முழுப்பொருளையும் தாமே தனித்து அனுபவித்தல் ……

(2x1=2)

09) பின்வரும் பழமொழிகளின் கருத்தைத் தருக.

1. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு …….
2. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் …….

(2x1=2)

10) பின்வரும் சொற்களின் வழுக்களை நீக்கி எழுதுக.

1. தவக்களை …….....
2. ஆத்தங்கரை ……..

(2x1=2)

11) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தினை எழுதுக.

1. Village - …….. 2. Fingers - ……..

(2x1=2)

12) பின்வரும் வாக்கியங்களின் தமிழ்க் கருத்தினை எழுதுக.

1. Please open your book - ……..……..
2. I am closing my bag - ……..……...

(2x2=4)

13) பின்வரும் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

1. கியவன்ன - ……..
2. உடபனின்ன - ……...

(2x1=2)

14) பின்வரும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறும் விதத்தை தமிழில் எழுதுக.

1. நாங்கள் பாடசாலைக்குப் போவோம் …….
2. வைத்தியசாலை எங்கே அமைந்துள்ளது ……

(2x1=2)

15) **உமது நண்பன்/நண்பியிடம் உமக்கு பிடித்த விடயங்கள்** எனும் தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருப்பதுடன் எழுவாய் பயனிலையும் எழுத்துக் கூட்டலும் சரியாக அமைதல் வேண்டும்.

1. ……

   ……

2. ……

   ……

3. ……

   ……

(3x2=6)

❖ **பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தருக.**

16) A என்பவர் 1265 செங்கற்களையும் 2346 சீமெந்துக் கற்களையும் கொள்வனவு செய்தார். அவர் கொள்வனவு செய்த மொத்தக் கற்களின் எண்ணிக்கையை சொற்களில் எழுதுக.
.....

17) 1 - 20 வரையான உரோம எண்குறிகளில் மூன்று தீக்குச்சிகளை மட்டும் கொண்டு ஆக்கக்கூடிய உரோம எண்களை எண்குறிகளில் எழுதுக. .....

18) தொழிற்சாலை ஒன்றில் ஆண்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கிலும் முப்பது கூடிய எண்ணிக்கையில் பெண்கள் தொழில் புரிகின்றனர். ஆண்களின் எண்ணிக்கை 40 எனின் அங்கு தொழில் புரிவோரின் மொத்த எண்ணிக்கை யாது? .....

19) ஒரு கூடையில் உள்ள பழங்களில் $\frac{2}{5}$ பங்கு விற்ற பின் எஞ்சிய பழங்கள் 150 எனின்

1. விற்ற பழங்களின் எண்ணிக்கை யாது? .....
2. அக்கூடையில் ஆரம்பத்தில் இருந்த பழங்களின் எண்ணிக்கை யாது? .....


20) ஒரு தையற்கடையில் 755 சேட்டுக்கள் தைக்கப்படுகின்றன. ஒரு சேட்டில் 7 பொத்தான்கள் வீதம் தைக்கப்பட்டால் எல்லாமாக எத்தனை பொத்தான்கள் தைக்கப்பட்டிருக்கும்? .....

21) பிறந்தநாள் வைபவம் ஒன்றிற்கு ஒரு தூணில் 12 பலூன்கள் வீதம் 216 பலூன்களை எத்தனை தூண்களில் கட்டலாம்? .....

22) பாடசாலைக்குக் கிழக்கே வைத்தியசாலையும் வைத்தியசாலைக்கு வடக்கே ஆலயமும் அமைந்துள்ளது. எனின் பாடசாலைக்கு எத்திசையில் ஆலயம் அமைந்துள்ளது?
.....

23) ரமேசின் நிறை 43kg 630g சுரேசின் நிறை 71kg 580g எனின் இருவரினதும் மொத்த நிறை எவ்வளவு? .....


24) 5 மணித்தியாலம் 15 நிமிடங்களை நிமிடங்களில் தருக. .....

25) 

இத் திண்மத்தின் ஒரு ஓரத்தின் நீளம் 5 எனின் முழு ஓரங்களினதும் மொத்த நீளம் எவ்வளவு? .....

26) ஒருவர் வீட்டிலிருந்து 10m 75cm தூரமுள்ள ஆலயத்தை அடைந்து ஆலயத்திலிருந்து 25m 50cm தூரமுள்ள பாடசாலையை அடைந்து திரும்பவும் அதே பாதையில் வீட்டை வந்து சேர எடுக்கும் தூரம் எவ்வளவு? .....

27) உருவில் 0.5 நிழற்ற மேலும் எத்தனை கட்டங்கள் நிழற்றப்பட வேண்டும்? .....




28) ஒரு பொம்மை ரூபாய் 140.00 ஒரு விளையாட்டுக் கார் ரூபாய்.650.00 எனின் இரண்டு பொம்மைகளையும் மூன்று விளையாட்டுக் கார்களையும் வாங்கத் தேவையான மொத்தப் பணம் எவ்வளவு? .....

29) A பாத்திரம் கொள்ளக்கூடிய திரவத்தின் அளவு 2l 650ml ஆகும். B பாத்திரம் கொள்ளும் திரவத்தின் அளவு 4l 300ml இரு பாத்திரங்களும் கொள்ளும் திரவத்தின் அளவினை பாத்திரம் C கொள்ளும் எனின்

1. பாத்திரம் C கொள்ளும் திரவத்தின் அளவு யாது? .....
2. A,B,C ஆகிய மூன்று பாத்திரங்களும் கொள்ளும் மொத்த அளவு யாது? .....

30) சில நகரங்களுக்கிடையிலான தூரம் தரப்பட்டுள்ளது.

1. மாத்தறையிலிருந்து கொழும்புக்கான தூரம் எவ்வளவு? .....
2. கொழும்பிலிருந்து புத்தளத்திற்கான தூரம் எவ்வளவு? .....



(15x2=30)

❖ **பின்வரும் வினாக்களில் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.**

31) உடல் வளர்ச்சிக்கு உதவும் போசனைக்கூறு எது?
1. புரதம் 2. மாப்பொருள் 3. விற்றமின்கள்

32) அதிகளவு தூசுக்களைக் கொண்ட வளியைச் சுவாசிப்பதால் ஏற்படும் நோய் அல்லாதது?
1. தும்மல் 2. காசநோய் 3. வயிற்றோட்டம்

33) உள்ளக விளையாட்டுக்களில் ஒன்று எது?
1. சதுரங்கம் 2. கிரிக்கெட் 3. எல்லே

34) கஞ்சக் கருவி அல்லாதது?
1. சலங்கை 2. தம்புரா 3. சல்லாரி

35) நீரில் கரையும் விற்றமின்கள் அல்லாதது?
1. விற்றமின் B 2. விற்றமின் C 3. விற்றமின் A

36) ஒளி வளையம் உள்ள கோள்
1. சனி 2. செவ்வாய் 3. வெள்ளி

37) திரவ நிலையில் காணப்படும் உலோகம்
1. செப்பு 2. பாதரசம் 3. அலுமினியம்

38) வேடுவர்களின் புனித நூல் எது?
1. அல்குர்ஆன் 2. திரிபீடகம் 3. யாக்பெல்

39) ஹொக்கி விளையாட்டில் ஒரு குழுவில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை?
1. 16 2. 11 3. 7

40) CEB எனும் சுருக்கக் குறியீடு குறித்து நிற்பது?
1. இலங்கை மின்சார சபை
2. இலங்கை போக்குவரத்துச் சபை
3. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

41) விற்றமின் D குறைபாட்டினால் ஏற்படக் கூடிய நோய்?
1. என்புருக்கி 2. ஸ்கேவி 3. மாலைக்கண்



42) சிக்குன்குன்யா நோயை பரப்பும் நுளம்பு?
1. ஈடிஸ் 2. கியூலெக்ஸ் 3. அனோபிலிஸ்

43) றம்புட்டான் பூக்கும் காலம்?
1. சித்திரை 2. புரட்டாதி 3. பங்குனி

44) ஆணிவேர் அற்ற தாவரம்?
1. வேம்பு 2. தென்னை 3. முதிரை

45) எதிரிகளை தமது கொடுக்கினால் தாக்கும் பிராணி அல்லாதது?
1. தேனீ 2. பாம்பு 3. குளவி

46) 
இத் தாவரத்தின் பெயர்?
1. குப்பைமேனி 2. நன்னாரி 3. திருக்கள்ளி

47) பின்வருவனவற்றில் வேட்டைக்காரனை காட்டும் உடுத்தொகுதி எது?
1. 
2. 
3. 

48) வானொலியை கண்டுபிடித்தவர் யார்?
1. மார்க்கோணி 2. கலிலியோக்கலிலி 3.கிரகம்பெல்

49) இவ் வித்து பரம்பலடையும் விதம்?
1. நீரினால் 2. விலங்கினால் 3. காற்றினால்

50) நீர்க்குவளை ஒன்றினுள் பனிக்கட்டி ஒன்றை போடும் போது உடனடியாக நிகழ்வது?
1. மிதக்கும் 2.அமிழும் 3. அமிழ்ந்து மிதக்கும்

51) ஊவாமாகாணத்தில் அமையப் பெறாத மாவட்டம்?
1. கேகாலை 2. பதுளை 3. மோனராகலை

52) 400m தடைதாண்டலில் ஒலிம்பிக் போட்டியில் டங்கன் வைற் பதக்கத்தை பெற்ற ஆண்டு?
1. 2000ம் ஆண்டு 2. 2012ம் ஆண்டு 3. 1948ம் ஆண்டு

53) இலங்கையின் தற்போதய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி?
1. 
2. 
3. 

54) இலங்கையில் ஒட்டுப்பலகை தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
1. ஜின்தோட்டை 2 பியந்தல 3. நாத்தான்டியா

55) நீரில் முழுமையாக அமிழ்ந்திருக்கும் தாவரம்?
1. பாசி 2. இலைப்பாசி 3. ஆகாயத்தாமரை

56) தாவரங்கள் பிராணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் மனித செயற்பாடு அல்லாதது?
1. காட்டை அழித்தல் 2. மரங்களை வளர்த்தல் 3. இரசாயணப்பாவனை

57) குந்துகாலி என கூறப்படும் பிராணி?
1. புழுனி 2. குயில் 3. நாகணவாய்

58) புகையூட்டி பாதுகாக்கப்படும் உணவு?
1. பலாக்காய் 2. எலுமிச்சைபழம் 3. இறைச்சி

59) விற்பனைப் பொருட்களில் மஞ்சள் நிற வட்டம் குறிப்பது?
1. சீனி அதிகமாக உள்ளது
2. சீனி மத்திம அளவில் உள்ளது
3. சீனி குறைந்த அளவில் உள்ளது

60) முதலுதவி பெட்டியினுள் இருக்கக் கூடிய பொருடள் அல்லாதது?
1. பனடோல் 2. தொற்றுநீக்கி 3. அளவுநாடா

(30x1=30)

